36. மேயோ பிரபுவின் _______ ஆம் ஆண்டின் புகழ்பெற்ற தீர்மானம், உள்ளாட்சி அரசாங்கத்தின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

(1) கி.பி. 1870 (2) கி.பி. 1789 (3) கி.பி. 1850 (4) கி.பி. 1845

37. யாருடைய தீர்மானம் "உள்ளாட்சி அரசாங்கத்தின் மகாசாசனம்" என்று அழைக்கப்படுகிறது?

(1) வில்லியம் பெண்டிங் (2) திப்பு சுல்தான்

(3) கர்சன் பிரபு (4) ரிப்பன் பிரபு

38. மாகாண சுயாட்சியை இந்திய அரசுச் சட்டம் அறிமுகப்படுத்திய ஆண்டு _______.

(1) கி.பி. 1919 (2) கி.பி. 1935 (3) கி.பி. 1939 (4) கி.பி. 1941

39. ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக்குழு தொடங்கப்பட்ட ஆண்டு _______.

(1) கி.பி. 1600 (2) கி.பி. 1670 (3) கி.பி. 1780 (4) கி.பி. 1678

40. சந்திரகிரி அரசரின் பிரதிநிதி _______.

(1) தமர்லா வெங்கடபதி (2) திர்மாரி வெங்கடபதி

(3) அருணாச்சல ரெட்டி (4) சாவித்ரி ரெட்டி

41. டல்ஹௌசி சதுக்கம் உள்ள இடம் _______.

(1) கொல்கத்தா (2) குஜராத் (3) பீகார் (4) டெல்லி

42. மாநில மறுசீரமைப்புச் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு _______.

(1) கி.பி. 1957 (2) கி.பி. 1956 (3) கி.பி. 1961 (4) கி.பி. 1959

43. மதராஸ் மாநிலம், தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஆண்டு

(1) 1978 (2) 1971 (3) 1969 (4) 1967

LIVEWORKSHEETS

44. மதராஸ், சென்னை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஆண்டு ______.

(1) 1996 ஜூலை 17 (2) 1997 மார்ச் 22

(3) 1996 செப்டம்பர் 1 4) 1999 அக்டோபர் 3

45. பம்பாய் எத்தனை தீவுகளைக் கொண்டது?

(1) 5 (2) 6 (3) 7 (4) 8

46. ஆங்கிலேயக் கிழக்கிந்திய நிறுவனம், அதன் தலைமையகத்தைச் சூரத்திலிருந்து பம்பாய்க்கு மாற்றிய ஆண்டு ______.

(1) கி.பி. 1687 (2) கி.பி. 1688 (3) கி.பி. 1676 (4) கி.பி. 1671

47. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

கூற்று: இந்தியா, பிரிட்டனின் வேளாண்மைக் குடியேற்றமாக மாறியது.

காரணம்: பிரிட்டனின் ஒரு வழியிலான சுதந்திரமான வர்த்தகக் கொள்கை மற்றும் தொழிற்துறை புரட்சி, இந்திய உள்நாட்டுத் தொழில்களை அழித்தன.

(1) கூற்று சரி மற்றும் காரணம் தவறு

(2) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

(3) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது

(4) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை

48. ஐரோப்பியர்களால் உருவாக்கப்பட்ட கடலோர நகரம் / நகரங்கள்

(1) சூரத் (2) கோவா (3) பம்பாய் (4) மேற்கண்ட அனைத்தும்

49. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய நகரமயமாக்கலின் ஒரு புதிய நடைமுறை அல்லாதது எது?

(1) சூயஸ் கால்வாய் திறப்பு (2) நீராவிப் போக்குவரத்து அறிமுகம்

(3) ரயில்வே கட்டுமானம் (4) மேற்கண்ட எதுவுமில்லை

50. ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வருகை தந்தது ______.

LIVEWORKSHEETS

(1) வர்த்தகத்திற்காக (2) தங்கள் சமயத்தைப் பரப்புவதற்காக

(3) பணி புரிவதற்காக (4) ஆட்சி செய்வதற்காக

51. புனிதஜார்ஜ் கோட்டை ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட இடம் ______.

(1) பம்பாய் (2) கடலூர் (3) மதராஸ் (4) கல்கத்தா

52. பொருத்துக

i. பம்பாய் - a) சமய மையம்

ii. இராணுவக் குடியிருப்புகள் - b) மலை வாழிடங்கள்

iii. டார்ஜிலிங் - c) ஏழு தீவு

iv. மதுரை - d) கான்பூர்

(1) i - a ii - c iii - d iv - b (2) i - c ii - d iii - b iv - a

(3) i - d ii - a iii - b iv - c (4) i - d ii - b iii - a iv - c

53. ______ இல் பிரான்சிஸ் டே மற்றும் ஆண்ட்ரூ கோகன் ஆகியோர் மதராசப்பட்டினத்தில் ஒரு தொழிற்சாலை மற்றும் வர்த்தக நிறுவனத்தை நிறுவுவதற்கு அனுமதி பெற்றனர்.

(1) கி.பி. 1657 (2) கி.பி. 1956 (3) கி.பி. 1639 (4) கி.பி. 1959

54. மாநகராட்சி உருவாவதற்குக் காரணமாக இருந்தவர் ______.

(1) பிரான்சிஸ் டே (2) ஆண்ட்ரூ கோகன்

(3) பெரி திம்மப்பா (4) சர் ஜோசியா சைல்டு

55. பின்வரும் எந்தஅறிக்கை / அறிக்கைகள் உண்மையற்றவை?

i) ஸ்ரீரங்கராயலு ஆங்கிலேயர்களுக்கு மதராசப்பட்டினத்தை மானியமாக வழங்கினார்.

ii) பிரான்சிஸ் டே மற்றும் கோகன் ஆகிய இருவரும் புனித ஜார்ஜ் கோட்டை கட்டியதற்குப் பொறுப்பானவர்கள்.

iii) 1969 ஆம் ஆண்டில் மெட்ராஸ் மாநிலம் தமிழ்நாடு எனப் பெயரிடப்பட்டது.

LIVEWORKSHEETS

(1) i மட்டும் (2) i மற்றும் ii (3) ii மற்றும் iii (4) iii மட்டும்

56. கூற்று: ஆங்கிலேயர்கள் தங்கள் மாற்றுத் தலைநகரங்களை மலைப்பாங்கான பகுதிகளில் அமைத்தனர்.

காரணம்: அவர்கள் இந்தியாவில் கோடைக்காலத்தில் வாழ்வது கடினம் என உணர்ந்தனர்.

(1) கூற்று சரி மற்றும் காரணம் தவறு.

(2) கூற்று தவறு மற்றும் காரணம் சரி.

(3) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது.

(4) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை.

57. பின்வருவனவற்றில் எது இந்தியாவின் பண்டைய நகரம் அல்ல?

(1) வாரணாசி (2) அலகாபாத் (3) மதுரை (4) டெல்லி

58. இடைக்காலத்தில் எந்த நகரம், தலைமையகமாக உருவாக்கப்பட்டது?

(1) அலகாபாத் (2) மதுரை (3) டெல்லி (4) ஹரப்பா

59. பின்வருவனவற்றில் நவீன கடற்கரை நகரம் எது?

(1) மும்பை (2) சிம்லா (3) மதுரை (4) லக்னோ

60. வர்த்தகத்தில் முக்கியப் பங்கு வகித்தவை __________ .

(1) பெருநகரங்கள் (2) நகரங்கள்

(3) துறைமுகங்கள் (4) நகர்ப்புறங்கள்

61. டார்ஜிலிங்கின் மாற்றுத் தலைநகராக விளங்கியது எது?

(1) சிம்லா (2) டெல்லி (3) கல்கத்தா (4) டேராடூன்

62. டெல்லியின் மாற்றுத் தலைநகராக விளங்கியது எது?

(1) சிம்லா (2) டார்ஜிலிங் (3) கல்கத்தா (4) டேராடூன்

63. கீழ்க்கண்ட குழுவில், நவீன கால நகரம் எது?

LIVEWORKSHEETS

(1) ஹைதராபாத் (2) நாக்பூர் (3) ஜெய்ப்பூர் (4) கல்கத்தா

64. 19 ஆம் நூற்றாண்டின் முதல் காலாண்டில் அழிக்கப்பட்ட, பேரரசின் தலைநகரமாக இருந்த நகரம் எது?

(1) ஆக்ரா (2) டெல்லி (3) சென்னை (4) கல்கத்தா

65. ____________ போருக்குப் பின்னர் ஆங்கிலேயர்கள் படிப்படியாக அரசியல் ஆதிக்கம் பெற்றனர்.

(1) பக்சார் (2) மைசூர் போர்-III

(3) கர்நாடகப் போர் (4) பிளாசி

66. இவற்றில் எவை உள்மாகாணங்களின் தலைநகராக விளங்கின?

(1) துறைமுக நகரங்கள் (2) இராணுவக் குடியிருப்புகள்

(3) மலை வாழிடங்கள் (4) இரயில்வே நகரங்கள்

67. மதராஸ், பம்பாய், கல்கத்தா போன்றவை ______________

(1) துறைமுக நகரங்கள் (2) இராணுவக் குடியிருப்புகள்

(3) 1 மற்றும் 4 (4) இரயில்வே நகரங்கள்

68. ஒரு நகர்ப்புறப் பகுதி என்பது.

i. அதிக மக்கள்தொகை அடர்த்தியைப் பெற்றிருக்கும்.

ii. நன்கு கட்டமைக்கப்பட்ட சூழலில் வாழ்வது.

iii. முதல் நிலைத் தொழிலில் ஈடுபடும் மக்களைக் கொண்டிருக்கும்.

iv. உணவு உற்பத்தியல்லாத தொழில்களில் ஈடுபடும் மக்களைக் கொண்டிருக்கும்.

(1) i தவிர அனைத்தும் (2) iii தவிர அனைத்தும்

(3) ii தவிர அனைத்தும் (4) iv தவிர அனைத்தும்

69. கிழக்குக் கடற்கரையில் தொழிற்சாலையைக் கட்டுவதற்கு, ஆங்கிலேயர்கள் அனுமதி பெற்ற முதல் இடம் ______________ .

LIVEWORKSHEETS

(1) சென்னை (2) கல்கத்தா

(3) மசூலிப்பட்டினம் (4) தூத்துக்குடி

70. கிழக்கிந்தியக் கம்பெனி தொடங்கிய எத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவில் தொழிற்சாலை அமைக்கப்பட்டது?

(1) 10 (2) 11 (3) 13 (4) 12

71. இவர்களில் சந்திரகிரியின் அரசராக இருந்தவர்/ இருந்தவர்கள்?

(1) தமர்லா வெங்கடபதி (2) வெங்கடபதி ராயலு

(3) இவ்விருவரும் (4) இவர்களில் யாரும் இல்லை

72. சென்னப்ப நாயக்கரின் மகன் பெயர் __________ .

(1) வெங்கடபதி (2) ஸ்ரீரங்கராயலு

(3) ராமசாமி நாயக்கர் (4) பிரான்சிஸ் டே

73. புனித ஜார்ஜ் கோட்டைக்குள் கடல் நுழைவாயில் வழியாக நுழைந்தால், முதலில் காணப்படும் கட்டடம் __________ .

(1) கிளைவ் மாளிகை (2) சட்டமன்றம்

(3) தமிழக அரசின் இருக்கை (4) சர்ச்

74. புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள, தமிழக அரசின் இருக்கைக் கட்டடம் கட்டப்பட்ட ஆண்டு.

(1) 1746-1763 (2) 1600-1857 (3) 1814-1816 (4) 1694-1732

75. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில், மதராஸ் மாகாணத்திற்குட்பட்ட பகுதிகள், கீழ்க்கண்டவற்றில் எவை?

i. தமிழ்நாடு ii. ராயலசீமா

iii. அந்தமான் நிக்கோபார் தீவுகள் iv. லட்சத்தீவுகள்

v. தெற்கு ஒரிசா vi. வடக்குக் கேரளா

LIVEWORKSHEETS

(1) v, iii தவிர அனைத்தும்

(2) iv, ii தவிர அனைத்தும்

(3) iii தவிர அனைத்தும்

(4) iv தவிர அனைத்தும்

76. பம்பாய், 1534லிருந்து யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தது?

(1) போர்ச்சுகீசியர்கள்

(2) ஆங்கிலேயர்கள்

(3) பிரெஞ்சுக்காரர்கள்

(4) முகலாயர்கள்

77. போர்ச்சுகீசிய இளவரசியைத் திருமணம் செய்து கொண்டவர்?

(1) ஏழாம் எட்வர்டு

(2) முதலாம் சார்லஸ்

(3) இரண்டாம் சார்லஸ்

(4) ஐந்தாம் ஜார்ஜ்

78. இந்தியாவில் மேயர் பதவி உருவாக்கப்பட்ட ஆண்டு எது?

(1) 1688 (2) 1690 (3) 1639 (4) 1661

LIVEWORKSHEETS